பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 10 செவ்வாய்க்கிழமை 27.02.2024 கதிர் 112

# சபாநாயகர் யாப்பாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## எதிர்க் கட்சிகள் கையெழுத்திட்டன

சபாநாயகர்லக்ஸ்மன்யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் இறங்கியுள்ளன.

இதற்கமைக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக்காலை கூடிய எதிர்க் கட்சிகளின் உறுப்பினர்கள் தீர்மான வரைவில் கையொப்பமிட்டனர்.

தீர்மான வரைவில் எதிர்க் கட்சித்தலைவர்சஜித்பிரேமதாச, லக்ஸ்மன் கிரியெல்ல, திஸ்ஸ அத்தநாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார, சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் ☞ 2

### இனி அது ரகசியம் அல்ல!

2015 பொதுத் தேர்தல் முடிந்ததும் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியப் பேரவை என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்தலைமையில் சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இந்தப் பேரவை உருவாக்கப்பட்டது. அப்போதைய தேர்தலில் தோல்வியைத் தழுவியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (தமிழ் காங்கிரஸ்), கூட்டமைப்பைச்சேர்ந்தவரானசுரேஸ் பிரேமச்சந்திரன்போன்றவர்கள்அதில் முன்னணியில் இருந்தனர்.

அந்தப் பேரவையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோமற்றும்புளொட்டும்இருந்தன. தமிழ் அரசுக் கட்சி மட்டுமே ☞ 2

## பொலிஸ் மா அதிபராக தென்னகோன் நியமனம்

இலங்கையின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன் நேற்று நியமிக்கப்பட்டார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின்செயலாளர்வழங்கினார்.

தேசபந்து தென்னகோன் 2023 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டு இருந்த காரணத்தால் அவரைப் ☞ 8

## சபாநாயகர் யாப்பாவின் செயற்பாடு ஜனநாயகத்தை மலினப்படுத்துகிறது

### பேராசிரியர் ஜி.எல்.பீரஸ் விளாசல்

சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தனவின் செயற்பாடுகள் அரசமைப்பையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தையும்மலினப்படுத்தும் வகையில் உள்ளன என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தனவுக்கு எதிராகநம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முதல்கட்டமாக கைச்சாத்திட்டுள்ளோம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்கட்சிகளுடனும் இது தொடர்பில் பேச்சு ☞ 2

## பிரித்தானிய உயர்ஆணையருடன் கொழும்பில் நேற்று ரெலோ சந்திப்பு

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சியான ரெலோவுக்கும் பிரித்தானிய உயர்ஆணையருக்கும் இடையிலான நேற்று சந்திப்பு நடைபெற்றது.

பிரித்தானிய சார்பில் இலங்கைக்கான புதிய உயர்ஆணையர் அன்ட்ரூ பற்றிக், சமாதானம் மற்றும் மனித உரிமைக்கான செயலாளர் ஹென்றி டொநாட்டி ஆகியோரும் ரெலோ சார்பில் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் தேசிய அமைப்பாளர், பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதானமாக, தொடங்கியிருக்கும் ஐ.நா. ☞ 2

## சுகாதார அமைச்சு செயலருடன் ஜெய்கா நிறுவன பிரதிநிதி சந்திப்பு

ஜெய்கா - இலங்கைக்கான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனஅலுவலகத்தின் பிரதமபிரதிநிதி டெட்சுயா யமடா, சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபாலவை நேற்று சுகாதார அமைச்சில் சந்தித்தார்.

இலங்கையின் சுகாதார அமைப்பில் சேவைகளை மேம்படுத்துவதற்காக ஜெய்கா திட்டத்தின்மூலம்நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தி மற்றும் ஆதரவு திட்டங்கள் குறித்து சுகாதார செயலாளருக்குடெட்சுயா யமடா தெரிவித்தார்.

மேலும், இத்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத் தப்படும் 'தொற்றுக் கழிவு மேலாண்மைமேம்பாட்டுத்திட்டத்தின்' மூலம் 15 மருத்துவமனை களில் ஏற்படுத்தபட்டுள்ள ☞ 2

## மின்சார கட்டணத்தை 20 % குறைப்பதற்குப் பரிந்துரை

மின்சாரக் கட்டணத்தினை 20 சதவீதத்தினால் குறைக்குமாறு பொருளாதார நெருக்கடியை தணித்தல் தொடர்பான நாடாளுமன்றதுறைசார்மேற்பார்வைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக் கடியை தணித்தல்தொடர்பானபாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவானதுநேற்றையதினம் கூடியது. இதன்போது சமகால பொருளாதார நெருக்கடிகள்சம்பந்தமாக அதிகாரிகளுடன் கலந்து ரையாடியது. அதனடிப்படையில், மின்சாரக்கட்டணத்தின் அதிகரிப்பினால் பொதுமக்கள் மிகுந்த நெருக்கடிகளைசந்தித்து வருகின்றார்கள் என்ற விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.அதனடிப்படையில் பொதுப் பயன்பாடுகள் தொடர்பான ஆணைக் குழுவிற்கு எழுத்து மூலமாக தமது பரிந்துரைகளைஅனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, மின்சாரக்கட்டத்தினை 20சதவீதத்தினால் குறைக்குமாறும், துண்டிக்கப்பட்டமின்சார இணைப்புக்களை ☞ 2

## உறுமய காணி உரித்துக்கு அவசர தொலைபேசி இல.

'உறுமய' தேசிய வேலைத் திட்டத்தின் அபிலாஷைகளை நனவாக்கி, மக்கள்தமது காணியின் முழுமையான உரிமையை அனுபவிக்கும்வாய்ப்பை வழங்கும் நோக்கில்அதற்காகவிண்ணப்பிப்பதற்கு அவசரத் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

தினமும்காலை8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஜனாதிபதி அலுவலகம்இ உறுமய தேசியசெயற்பாட்டுஅலுவலகம், 1908 என்ற அவசரத் தொலைபேசி இலக்கம் மற்றும் 0114 354600/0114 354601 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தமது கோரிக்கைகளைப்பதிவு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

www.tinyurl, com/m/urumaya என்ற இணையத்தளத்தில் டிஜிட்டல்விண்ணப்பப் படிவத்தையும் பூர்த்திசெய்தும்இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1935ஆம்ஆண்டின் 19 ஆம் இலக்க நில மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் மூலம் ☞ 10

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எல்பிட்டியவில் சுட்டுக்கொலை

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் டபிள்யூ.டிறொஷான்புஷ்பகுமார நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார். தனது இளைய மகனை முதலாம் ஆண்டுக்குப் பாடசாலைக்கு அனுப்புவதற்குத் தயாராகிக் கொண் டிருந்தபோதே அவர் கொலை செய்யப்பட்டார்என்றுபொலிஸார் தெரிவித்தனர்.

கரந்தெனிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நிர்வாக பொது சுகாதார பரிசோதகராக பணியாற்றிய 51 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையானபுஷ்பகுமார எல்பிட்டியவில் உள்ள அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டதற்கான சரியான காரணம் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டியபதில் ☞ 10

## மலையக மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிலும்கூட கவனம் தேவை

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நாளாந்த சம்பளத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வீடு, காணி, கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என ஒவ்வொரு பகுதியிலும்கவனம்செலுத்தப்படவேண்டும் என நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயற்பாடுகளைப் பொருத்தவரை, கடந்த 19 ஆம் திகதி 1300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது. இந்தவேலைத்திட்டத்தில் எவ்வித தாமதமும் இருக்கக் கூடாது என்ற வகையிலேயே ஒரே நேரத்தில் இதனை ஆரம்பித்தோம். எஞ்சியிருக்கின்ற 8700 வீடுகளையும் இவ்வாறே ஒரே நேரத்தில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஏனென்றால் நாம் ஒரு முறைமையின் அடிப்படையில்செயற்பட விரும்புகின்றோம். இந்த 1300 வீட்டுத்திட்டம் எதிர்வரும்ஓகஸ்ட்மாதம் பூர்த்தி செய்யப்படும்.

இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் அரசியல் ரீதியாக தெரிவுசெய்யப்படுவதாக சில விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டன.அதில் எந்த உண்மையும் கிடையாது. முக்கியமாக இந்த வீட்டுத்திட்டப் பய னாளிகள் ☞ 8

## வரலாற்று வெற்றியுடன் ரணில் மீண்டும் பதவிக்கு

### ஐ.தே.கவின் எம்.பியின் கனவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவரலாற்று வெற்றியுடன் மீண்டும் ஆட்சிப்பீடத்தில்அமர்வார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

முதலில் ஜனா திபதி தேர்தல் நடை பெறுமா இல்லைநாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா என்றுகுழம்பவேண்டியதில்லை. அரசமைப்பின் பிரகாரம்உரியகாலத்தில் உரிய தேர்தல்கள் நடைபெறும். நாம் தேர்தல்களுக்குப் பயந்தவர்கள் அல்லர்.

அதே நேரம், பொது மக்கள் நாட்டை வழிநடத்தவதற்கான தலைவரைதெரிவு ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

# ஆவரங்காலில் விசர் நாய் கடித்த இளைஞன் இறப்பு

## கூடப் பழகியவர்கள் மருத்துவமனையை நாடவும்

யாழ்ப்பாணம் - ஆவரங்கால் பகுதியில் விசர்நாய் கடித்த இளைஞரொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

ஆவரங்கால் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த பிரதாபன் ஷாலமன் என்ற 23 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

சில தினங்களுக்கு முன்னர் நாய் கடித்து இயலாமைக்குள்ளான குறித்த இளைஞன் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுமேலதிக சிகிச்சைக்காக. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் விசர்நாய் கடித்தே இளைஞன் உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது

இந்நிலையில் குறித்த இளைஞனை கடித்த விசர்நாய் வேறு யாரையும் கடித்திருக்கலாம் எனக்கருதப்படுவதால் அப்பகுதியில் அண்மையில் நாய்க்கடிக்கு உள்ளானோர் உடனடியாக வைத்தியசாலையை நாடுவதுடன், உயிரிழந்த இளைஞனுடன் பழகியவர்கள் வைத்தியசாலையை நாடுவது சிறந்தது என அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## இனி இது .....

அதில் இடம்பெற்றிருக்கவில்லை. விக்னேஸ்வரனும் கூட கூட்டமைப்புடன் முரண்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. எல்லோரையும் சேர்த்து அமைக்கப்பட்ட ஓர் அமைப்பாகவும் தமிழ்த் தேசியகத்தைக் கட்டியெழுப்புவதற்கான அமைப்பாகவும் அது உருவகிக்கப்பட்டது. என்றாலும் அடிப்படையில் தேர்தலில் தோற்றவர்களின் அரசியல் மீள் எழுச்சிக்கான அமைப்பாகவே அது இருந்தது.

அதனாலேயே அந்தப் பேரவை வந்த வேகத்திலேயே காணாமற்போனது. அந்த அமைப்பில் கிடைத்த பலத்தைப் பயன்படுத்தி விக்னேஸ்வரன் தன்கொரு தனிக் கட்சியை உருவாக்கிக் கொண்டார். பேரவையை தனது அரசியல் தேவைக்குப் பயன்படுத்த விக்னேஸ்வரன் இடமளிக்கமாட்டார் என்பது தெளிவானதும் முன்னணி அதிலிருந்து விலகியது. கடைசியில் பேரவை செத்துப்போனது. ஆக மொத்தத்தில் தேர்தலில் தோற்றவர்களின் மீள் எழுச்சிகாக பேரவை மூலம் உடனடியாகத் தூக்கிப் பிடிக்கப்பட்டது தமிழ்த் தேசியம்தான்.

தமிழ் தேசியம் என்பது தேர்தலில் தோற்றவர்களின் அரசியல் மீள் எழுச்சிக்கான கோசம் தானோ என்ற சந்தேகத்தை கொடிகாமத்தில் பெப்ரவரி 25,26 நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி நாள் என்கிற நிகழ்வு மீண்டும் எழுப்பி விட்டுள்ளது. தமிழ் அரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்கட்சி மோதல் தீவிரமடைந்து நீதிமன்றம் வரை சென்றுள்ள நிலையில், அந்தக் கட்சிக்குள்ளேயே கடந்தகாலங்களில் தேர்தலில் தோற்றவர்களதும் தேர்தலில் போட்டியிட இடமளிக்கப்படாதவர்களதும் முகங்களையே காண முடிந்தது. கோடீஸ்வரன், அரியநேந்திரன், யோகேஸ்வரன், சரவணபவன், சிறீநேசன் என்று முன் வரிசையில் அமர்ந்திருந்த -முகங்கள் அனைத்தும் இந்தச் சந்தேகத்தையே ஏற்படுத்தின.

புலம்பெயர் தமிழர் ஒருவரின் நிதி ஆதரவில் இந்தக் கூட்டம் அவசர அவசரமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. அதனாலோ என்னவோ கூட்டத்தில் சனத் திரட்சி இருக்கவில்லை. அங்கு கூடியிந்தவர்கள் தேர்தலில் மட்டுமல்ல தமிழ் அரசுக் கட்சிக்குள் ஜனவரி மாத பொ-துக் குழுக் கூட்டத்திலும் தமது விருப்பங்களை நிறைவேற்ற முடியாமல் தோற்றவர்கள் என்பதும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. கூட்டத்தை ஏற்பாடு செய்தவரும் கட்சிக்குள் அதே அணியைச் சேர்ந்தவராவார். ஆக மொத்தத்தில் தோற்றவர்கள் தமது அரசியல் சரிவைத் தூக்கி நிறுத்துவதற்கான கோஷமாகத்தான் தமிழ்த் தேசியப் பயன்படுகிறதோ என்கிற அச்சத்தைக் கூட்டம் ஏற்படுத்தியது.

அதற்குமற்றொருகாரணமும் கூட இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் முதலில் பேசிய தென்கயிலை ஆதீனம் அங்கு கூடியிருந்த அரசியல்வாதிகளைப் பார்த்து நாக்கைப் பிடுங்கிக்கொள்கிற மாதிரி நான்கு கேள்வி கேட்டிருந்தார். அவருக்குப் பின்னால் பேசிய எவரும் அவரது கேள்விகளில் ஒன்றுக்குக்கூடப் பதில் சொல்லவில்லை. அவர்கள் எல்லோரும் ஏதேதோ பேசினார்கள். ஆனால் ஆதீனத்தின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

அதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துச்சிதைத்து சின்னாபின்னமாக்குவதில் சர்வதேசம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது என்று கோடீஸ்வரன் கூட்டத்தில் முழங்கினார். ஆனால், அதே சர்வதேசம்தான் தமிழர்களுக்கு தீர்வைப்பெற்றுத்தரும் என்றுதானே அவர்கள் எல்லோரும் இதுவரையில் மேடை மேடையாக முழங்கி வாக்குக்கேட்டுவந்தார்கள் என்பதை வசதியாக மறந்துவிட்டார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்று கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் முஷ்டியை முறுக்கி முழங்கியபோதெல்லாம் அவருக்குப் பின்னால் கைகளைக் கோர்த்தபடி தாமும் அணிதிரண்டு நின்றார்கள் என்பதை மறந்துவிட்டார்கள்.

இந்த லட்சணத்தில்தான் இப்போது தமிழ்த் தேசியத்தை அவர்கள் கையில் எடுத்துள்ளார்கள். நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி, வஞ்சனை சொல்வாரடி - கிளியே, வாய்ச்சொல்லில் வீரரடி என்கிற பாரதியார் வரிகள்தான் நினைவிலோடுகின்றன.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களுக்கு மீள வழங்குவதோடு அவர்கள் தமது நிலுவைக்கட்டணங்களை படிப்படியாக தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதி அளிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வரலாற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துவிட்டார்கள். அவர்கள் இம்முறை நாட்டை கட்டியெழுப்புவதையே எதிர்பார்க்கின்றார்கள்.

ஆகவே அவர்கள் பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டு முன்னெடுத்துக்கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் வரலற்று வெற்றியுடன் அவரை அதிகாரத்தில் அமர்த்துவதற்கு தீர்மானித்துள்ளார்கள். இது நிகழ்ந்தே தீரும் என்றார்.

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்,ஏ.சுமந்திரன், சுயாதீன உறுப்பினர்களான சந்திமவீரக்கொடி, ஷான் விஜயலால் டி சில்வா உள்ளிட்டவர்கள் இந்தப் பிரேரணையில் கையொப்பமிட்டனர்.

ஆரசமைப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையையும் சபாநாயகர் மீறியுள்ளமை, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினை தவறான வழியில் நிறைவேற்றியமை ஆகிய காரணங்களை முன்வைத்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

''நிகழ்நிலை சட்டம் நிறைவேற்றப்பட்டமையானது தவறான முறைமையிலாகும். இதன் மூலமாக உறப்பினர்களின் சிறப்புரிமையை சபாநாயகர் மீறியுள்ளார். அதுமட்டமன்றி உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளையும் அவர் உள்ளடக்கவில்லை. ஆகவே அவர் மீது உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்'' என்று இதுதொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மைகள் பற்றி தெரிவித்தார்.

மற்றும் 'சமூகத்தில் முதியோர்களை மையப்படுத்தி' யமடா டெட்சுயா, சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபாலவிடம் 'சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்' திட்டத்தின் முன்னேற்றம் குறித்து விளக்கினார்.

70 வருட கால இராஜதந்திர உறவுகளைக் கொண்ட ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும், இந்நாட்டின் சுகாதார சேவைகளின் முன்னேற்றத்திற்காக ஜெய்கா திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சேவைகளையும் சுகாதார செயலாளர் நினைவு கூர்ந்தார்.

இதன்போது சுகாதார அமைச்சர் அவர்களும் இலங்கை ஆளும் தரப்புச் சார்பாக நன்றியை தெரிவிப்பதாக சுகாதார செயலாளர் மேலும் தெரிவித்தார். அத்துடன் இவ்வாறான உதவியை எதிர்காலத்திலும் எதிர்பார்ப்பதாக அங்கு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஜெய்கா செயற்திட்டத்தின் சிரேஷ்ட பிரதிநிதி செல்வி யூரி ஐடியி மற்றும் உதவி அதிகாரி ஏரங்கராஜபக்ச ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த ஒரு அளவுகோளில் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்.

உதாரணமாக இரண்டு, மூன்று குடும்பங்கள் ஒரு லயத்தில் இருப்பார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதுவரை எந்தவொரு அரசாங்க வீட்டுத் திட்டத்தின் ஊடாகவும் பயன் பெறாதவர்களும் தற்காலிக குடியிருப்புகளில் இருப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் 7 பேர்ச்சஸ் காணி வழங்கப்படுவதாக சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மலையக மக்களுக்கு 10 பேச்சர்ஸ் காணி வழங்கப்படுகிறது. அவ்வாறு யாருக்காவது 7 பேர்ச்சஸ் காணி மட்டும் வழங்கப்படுமாயின் அது குறித்து முறையிட்டால் அவர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிப்பதற்காகவே பாரத் - லங்கா வீட்டுத் திட்டத்தின் மூலம் 10 பேர்ச்சஸ் காணி வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. ' பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தின் ஊடாக இந்த சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இந்த வருடத்தின் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக 'கந்துரட்ட தசக' என்ற வேலைத் திட்டத்தின் மூலம் 89 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தலா 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நிர்மாணிப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள வீடுகளுக்கு இதில் ஒரு தொகை நிதி வழங்கப்படும். மேலும் மலையக மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

காணி வழங்கப்படும் போது அந்தக் காணி உறுதிப்பத்திரத்தை பெருந்தோட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்குமாறு பெருந்தோட்டக் கம்பனிகள் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது. அதனை நாம் மறுத்திருக்கிறோம். காரணம், நிபந்தனையற்ற முறையில் இந்தக் காணி உறுதிப் பத்திரங்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். பெருந்தோட்டக் கம்பனிகளின் கோரிக்கையை பிரதமர் அலுவலகமும் மறுத்துள்ளது. இதனைத் தவிர, தற்போது பயனாளிகளைத் தெரிவு செய்வதற் கான அளவுகோ ளைத் தயாரிப் பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த காணி உரிமை வழங்குவது தொடர்பான திட்டத்தினை எதிர்வரும் மேமாதத்திற்கு முன்னர் அமுல்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்காக ஜனாதிபதி 4,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

அத்துடன், தோட்டத்தில் வேலை செய்தால் மட்டுமே வீடு வழங்கப்படும் என்ற நிபந்தனை இதுவரை இருந்தது. ஆனால் , இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையும் சேர்த்து, இந்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் தோட்டத்தில் பிறந்தால் வீடு என்ற வேலைத்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளோம்.

இதற்கமைய தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து, படித்து, தோட்டத்தில் இருந்து ஆசிரியர் தொழில் செய்யும் ஒருவருக்கும் இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்கும். அதேபோல், கலைஞர்களுக்கும் வீடு கிடைக்கும். அத்துடன், 2015 ஆம் ஆண்டு இந்திய வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி, அளவுகோளின் அடிப்படையில் வீடுகளை வழங்க எதிர்பார்த் துள்ளோம். ஆனால் இந்தப் பணிகள் அரசியல் மயப்படுத்தப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு நீர்க் கட்டணத்தை அதிகரிக்க நாங்கள் எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆண்டு அறிமுகம் செய்வதாக அறிவித்த நீர்க் கட்டண சூத்திரம் தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளது. நீர் சூத்திரதிலுள்ள விடயங்கள் குறித்து மேலும் ஆராய்ந்து வருகிறோம்.

நீர் சூத்திரம் மூலம் மக்கள் மீது மேலும் தேவையற்ற சுமையை திணிக்கவோ அதனை அமுல்படுத்தவோ தற்போது நாங்கள் எதிர்பார்க்கவில்லை. 2024 என்பது கொள்கைகளை உருவாக்கும் ஆண்டாகும். 2025 என்பது கொள்கை அமுலாக்கும் ஆண்டாகும். இருப்பினும், நீர்க் கட்டண சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு சில அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கூட கைச்சாத்திட்டுள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தேவையில்லை.

சில அரசியல் தலைவர்களின் கூற்றுப்படி, தோட்டங்களில் உள்ள தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஒரே பிரச்சினை 1500 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுக்கொள்வதாகும். எனது மக்களை அந்தளவு தாழ்த்த நான் விரும்பவில்லை. அரசாங்கம் அல்லது எதிர்க்கட்சி அல்லது எந்தக் குழுவின் அரசியல் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் சிறுபான்மைப் பிரிவினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசியல் பிளவுகள் இருக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

அதுவே எனது நிலைப்பாடுமாகும். அந்த சமூகத்தின் வளர்ச்சிக்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் இணைந்து செயற்பட முன்வருமாறு பல தடவைகள் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்த போதிலும் துரதிஷ்டவசமாக பலர் அரசியல் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்' என்றார்.

## ஜி.எல்.பீரஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவோம்.

93 வருடகால நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அம்சங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சபாநாயகர் செயற்படுகிறார். இவரது முறையற்ற செயற்பாடுகளைப் பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரத் தீர்மானித்தோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் செயற்படுகிறார். இவர் தனது தனிப்பட்ட அரசியல் செயற்பாட்டை நாடாளுமன்றத்துக்குள் செயற்படுத்திக் கொள்ள முயற்சிப்பதால் நாட்டு மக்களின் அரசியல் உரிமை அச்சுறுத்தலுக்குள்ளாக் கப்பட்டுள்ளதுடன், நாட்டின் அரசமைப்பும் மலினப்படுத்தப்படுகிறது.

அண்மையில் சபாநாயகரால் சான்றுரைப்படுத்தப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த சட்டத்தின் 57 ஏற்பாடுகளில் 34 ஏற்பாடுகளில் குறைப்பாடுகள் காணப்படுகின்றன அவற்றைத் திருத்தம் செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கவில்லை. தன்னிச்சையான முறையில் ஆளும் தரப்பின் அவசரத்துக்கு அமையச் செயற்பட்டார்.

சட்டமூலத்தை சான்றுரைப்படுத்துவதை மீள்பரிசீலனை செய்யுமாறு தேசிய மட்டத்தில் உள்ள சிவில் அமைப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும் வலியுறுத்திபோது அதனை கவனத்திற் கொள்ளாமல் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார். இந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த யோசனைகளில் ஐந்து பிரதான திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகளுக்கு இடமளித்துக் கொண்டிருந்தால் அது எதிர்காலத்துக்கு தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதால் தான் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர தீர்மானித்தோம் என்றார்.

## உறுமய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதிப் பத்திரங்கள் ஃ கொடுப்பனவுப் பத்திரங்கள் உள்ள அரசாங்கக் காணிகளை நிபந்தனைகளின்றி முழுமையான உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 2024 வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு தனித்துவமான முன்மொழிவாகும்.

இந்த 'உறுமய' நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முழுமையான உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களைப் பெறுவதன் மூலம், குறித்த காணிக்கு புதிய பெறுமதி கிடைப்பதுடன், அவர்களின் உரிமையைப்பாதுகாத்து அவர்களின் குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பு உருவாகும்.

## பொதுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் வஜிரா பொன்னம்பெரும சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

கொலை செய்யப்பட்ட புஷ்பகுமாரவின் மனைவி ஆசிரியை என்பதுடன், அவர் எல்பிட்டிய எல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அதிகாலையில் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடந்தபோது அவரது தாயும் இளைய மகன்களும் வீட்டில் இருந்தனர்.

## பொலிஸ்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு எதிர்ப்புக்கள் இருந்தன.

இதனால் அவரைப்பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்த ஜனாதிபதி, தற்போது அவரது பதவியில் அவரை நிரந்தரமாக்கியுள்ளார். இந்த நியமனத்தை அரசமைப்புப்பேரவை அங்கீகரிக்க வில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"பேரவையில் உள்ள நால்வர் ஆதரவாக வாக்களித்தனர். இருவர் எதிர்த்தனர். இருவர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. பேரவையின் எந்தவொரு முடிவும் 5 உறுப்பினர்கள் உள்ள கூட்டத்திலேயே எடுக்க முடியும். வாக்களிப்பு சமநிலையில் இருந்தால் மட்டுமே சபாநாயகர் வாக்களிக்க முடியும். இந்த விடயத்தில் சமநிலை ஏற்படவில்லை. எனவே அரசமைப்புப் பேரவை இரண்டாவது தடவையாக பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை முற்றிலுமாக நிராகரித்துள்ளது'' என்றார் அவர்.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சந்திரகுமாருக்கும் இடையில் சந்திப்பு

ஜனாபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரமான மு.சந்திரகுமார் மற்றும் சமத்துவக் கட்சியின் தலைவர் சு. மனோகரன் ஆகியோர் கடந்த சனிக்கிழமை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சனிக்கிழமை காலை இடம்பெற்ற இச் சந்திப்பின் போது கிளிநொச்சி மாவட்டம் உட்பட வடக்கின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள், பிரதேச அபிவிருத்தி பற்றி பேசப்பட்டதோடு, எதிர்கால அரசியல் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (05-113)

# 25 லட்சம் சுற்றுலா பயணிகளை வரவழைக்கும் ஆண்டாக 2024 ஆம் ஆண்டு அமையவேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் எதிர்பார்ப்பு இது

வரலாற்றில் முதல் முறையாக இந்த ஆண்டு 25 லட்சம் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் இலக்கை அடைய முடியும் என வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

அதன்படி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டால், உரிய இலக்கை எளிதாக எட்ட முடியும் என்பது தெளிவாகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் கூறுகையில் –

கடந்த வருடம் 15 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர். அந்த வருடம் ஜனவரியில் மட்டும் ஒரு லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

இவ்வருடம் ஜனவரியில் 2 லட்சத்து பத்தாயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வருகை தந்துள்ளனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்த கிரீஸ், ஜிம்பாப்வே, அர்ஜென்டினா போன்ற நாடுகள் அந்த நிலையிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்துக்கும் மேலாக எடுத்துக்கொண்ட போதிலும், இலங்கை இரண்டு வருடங்களில் உரிய இலக்குகளை நெருங்கியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆகவே, இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமும் திட்டங்களுக்கு ஆதரவாக அமைந்துள்ளன. உலகப் பொருளாதாரம் 86 ஆயிரம் பில்லியனாக இருக்கும் வேளையில் இலங்கையின் பொருளாதாரம் 74 பில்லியன் என்ற மிகச் சிறிய பெறுமதியில் இருக்கிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் பாரிய சந்தையை கட்டியெழுப்புவது அவசியமானது.

மேலும், சீனா, இந்தியா, பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகள் வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான



முயற்சியின் பலனாக இன்று வேகமாக முன்னேறி வருகின்றன.

நாட்டினது பாரிய சரிவுகள் காரணமாக 13 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்கள் எரிபொருள் மற்றும் எரிவாயு சிலிண்டருக்காக மூன்று முதல் நான்கு நாள்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருட குறுகிய காலத்தில் 24 மணித்தியால தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்கி, அனைத்து வரிசைகளையும் களைந்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தினார்.

ஆகவே, தொடர்ந்து இன்னும் சில வருடங்கள் அவரை ஆட்சி செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

நாடு கட்டம் கட்டமாக முன்னேறிக்கொண்டு வரும் இந்நிலையில், இந்த ஆட்சிக்குப் பதிலாக வேறொரு ஆட்சியை ஏற்படுத்த எவரேனும் முனைந்தால் தற்போதைய நிலையிலிருந்து நாட்டை இன்னும் முன்னேற்றகரமான நிலைமைக்கு முன்னோக்கி கொண்டு செல்வதற்கான பொருளாதாரத் திட்டங்களை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இந்த நாட்டின் அரச சேவை நாட்டுக்கு பெரும் சுமையாக காணப்படுகிறது. இதற்கு பல சீர்திருத்தங்கள் தேவை எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், எம்.எச். எம்.ஹலீம், கண்டி முன்னாள் நகர பிதா கேசர சேனாநாயக்க, கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# பொதுத் தேர்தலே மொட்டுவின் தெரிவு வியூகத்துடன் மார்ச் வருகிறார் பஷில

## உதயங்க வீரதுங்க கூறுகிறார்

பொதுத்தேர்தலை முதலில் நடத்துவதையே பொதுஜனபெரமுனவின் பெரும்பாலான அங்கத்தவர்களின் நிலைப்பாடாகவுள்ளதாகத் தெரிவித்துள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரும், ராஜபக்ஷக்களின் சகோதரருமான உதயங்க வீரதுங்க, அதற்கான வியூகத்துடன் பஷில் ராஜபக்ஷ மார்ச் மாதத்தில் நாடு திரும்பவுள்ளார் என்றும் குறிபபிட்டுள்ளார்.



பொதுஜனபெரமுன மற்றும் பஷில் ராஜபக்ஷவின் அடுத்தகட்டச் செயற்பாடுகள் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுஜனபெரமுனவை ஸ்தாபித்து கடந்த காலத்தில் நாட்டில் நடத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் பெருவெற்றிபெறச் செய்ததில் பஷில் ராஜபக்ஷவின் புத்திசாதுரியம் மிகவும் முக்கியமானது.

அந்த வகையில், அவர் நாட்டிலிருந்து வெளியேறியபோது, நாமல் ராஜபக்ஷவிடத்தில் கட்சிப்பணிகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தார்.

கட்சிக்கும், கிராமங்களில் உள்ள சாதாரண பொதுமக்களுக்கும் இடையிலான பிணைப்பை வலுவாக வைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கைளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதோடு அவர்களின் கோரிக்கைகள், பிரச்சினைகள் சம்பந்தமாக கவனம் செலுத்துவது தான் நாமல் ராஜபக்ஷவின் பிரதான பணியாக இருந்தது.

இவ்வாறான நிலையில், பஷில் ராஜபக்ஷ மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் நடுப்பகுதியில் நாடு திரும்பவுள்ளார். அவர் நாடு திரும்புவது, ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதி ஆசனத்தில் அழகுபார்ப்பதற்காக அல்ல.

பொதுஜனபெரமுனவை பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், கட்சியின் பெரும்பாலானவர்களின் நிலைப்பாடுகளுக்கு அமைவாக பொதுத்தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகும். பொதுத்தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதற்கான அறிவிப்பினை ஜனாதிபதியே செய்ய வேண்டும். இருப்பினும், பஷில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இதனடிப்படையில், பொதுத்தேர்தல் நடத்தப்படும் போது, அதற்கான வெற்றி வியூகங்களை வழங்கும் பிரதான பணியை பஷில் ராஜபக்ஷவே முன்னெடுப்பார்.

மேலும், பெரமுனவின் உறுப்பினர்களில் சிலர் ஜனாதிபதிக்கு ஆதரவாக நிற்கின்றபோதும், முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் அதில் ரணில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே பொதுத்தேர்தலை நடத்துவதே பொருத்தமான நகர்வாக இருக்கும்.

ஏவ்வாறாயினும், பஷில் ராஜபக்ஷ மீண்டும் பொதுஜனபெரமுனவினைப் பதவியில் அமர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார். – எனறார். (05)

# போர்க் காலங்களில் வடக்கு கிழக்கில் கடமையாற்றிய அதிகாரிகள் மற்றும் ஊடகவியாளர்களுக்கு கௌரவிப்பு

(பாறுக் ஷிஹான்)

30 வருட யுத்த காலங்களில் இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றிய அதிகாரிகள் சிரேஸ்ட ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்விற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க முன்வர வேண்டும் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கை நிர்வாக சேவையில் இருந்து அரசாங்க அதிபர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி ஷரூபவதி கேதீஸ்வரன் தற்போது ஓய்வு பெற்று மீண்டும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரான சேவையில் இணைந்துள்ளார்.அவருக்கான பாராட்டு நிகழ்வுகளை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.கடந்த 30 வருட யுத்த சூழ்நிலையில் வட கிழக்கு மாகாணங்களில் உயிரை துச்சமென மதித்து கடமையாற்றிய நிர்வாக சேவை அதிகாரிகள் அரசாங்க அதிபர்களும் அதே போல் கிழக்கு மாகாண சபையில் பிரதம செயலாளராக இருந்து பயங்கரவாதிகளால் சுட்டு கொல்லப்பட்ட ஹேரத் அபயவீர மற்றும் சுட்டுக் கொல்லப்பட்ட காத்தான்குடி பிரதேச செயலாளர் மர்ஹூம் ஏ.எல்.எம் பளீல், திருக்கோவில் பிரதேச செயலாளர் தவராஜா, அரசாங்க அதிபர் அந்தோனி முத்து, வட மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம் சாள்ஸ், அமைச்சின் செயலாளராகவும் முன்னாள் அரசாங்க அதிபராகவும் இருந்த கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, உட்பட சிரேஸ்ட ஊடகவியலாளர்கள் என பலரும் கௌரவிக்கப்பட உள்ளனர்.இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு வட கிழக்கில் உள்ள வர்த்தக நிலையங்கள் உதவ முன்வர வேண்டும்.அது மாத்திரமன்றி கடந்த யுத்த காலங்களில் செயற்பட்ட உயர் அதிகாரிகள் மற்றும் சிரேஸ்ட ஊடகவியலாளர்களது விவரங்களை அறிந்தவர்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு 0761870151 இத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என தெரிவித்தார்.

மேலும் கடந்த கால யுத்தத்தில் தமது உயிரை துச்சமாக மதித்து கடமையாற்றிய முதன் முறையாக இலங்கை நிர்வாக சேவை அரசாங்க அதிபர்கள் கௌரவிப்பது இது முதல் தடவை என்று நினைக்கின்றேன்.எதிர்காலத்தில் ஏனைய துறைகளை சார்ந்தவர்களும் எமது தொழிற்சங்கத்தால் கௌரவிக்கப்பட இருக்கின்றனர். – என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அம்பலப்படும் ஆளும் தரப்பு

சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன் வைப்பதற்கான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து வைக்கத்தொடங்கியுள்ளனர். அந்தப்பிரேரணை வெற்றிபெறாது என்பது எதிர்க்கட்சியினருக்கும் தெரியும் ஆளும் தரப்பினருக்கும் தெரியும். ஆளும் தரப்புக்கு 113க்கும் அதிகமான உறுப்பினர்களின் ஆதரவு இருக்கும் நிலையில் இந்தப் பிரேரணை வெற்றி பெறாது என்பது எல்லோருக்குமே தெரிந்த நிகழ்வுதான்.

பிரேரணை வெற்றி பெறாது என்று தெரிந்தாலும் சபாநாயகரும் ஆளும் தரப்பினரும் தவறு செய்கிறார்கள் என்பதை மக்களுக்கு அம்பலப்படுத்தும் முகமாகத்தான் இந்த முயற்சியில் ஈடுபடுகின்றோம் என்று முன்னர் ஒரு தடவை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார். உண்மையும் அதுதான்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதில் சபாநாயகர் தனது கடமையிலிருந்து தவறிவிட்டார், உயர் நீதிமன்றம் அந்தச் சட்டத்தில் செய்யும்படி கூறிய திருத்தங்களில் பல செய்யப்படாமலேயே இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முக்கியமாகக் கொண்டு வரப்படுகின்றது. ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் நான்கு முக்கிய தூண்களில் ஒன்றான நீதித்துறையை சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றம் மதிப்பிறக்கம் செய்யும் வகையிலான இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாததுதான்.

அதுமட்டுமல்ல, இந்தவிவகாரத்தில்தவறுகள் அனைத்தும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும்கூட ஆளும் தரப்பு அதனைப் பொருட்படுத்தவில்லை. நாடாளுமன்றில் தனக்குப் பெரும்பான்மை இருக்கின்றது என்கிற மிதப்பில், அனைத்து எதிர்க் கருத்துக்களையும் புறந்தள்ளியே நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. எனவே தெரிந்தேதான் இந்தத் தவறை ஆளும் தரப்பும் சபாநாயகரும் செய்துள்ளனர். அதன் பின்னர் சட்டத்தைத் திருத்தத் தயாராக இருக்கின்றோம் என்றும் அறிவித்துள்ளனர்.

அதற்காக சபாநாயகருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தில் உரிய ஏற்பாடுகள்எவையும்இல்லைஎன்பதால், எதிர்க் கட்சிகளாலும் தமது அடையாள எதிர்ப்பை மீறி எதுவும் செய்துவிடவும் முடியாது. இருந்தாலும் ஆளும் தரப்பு தனது தேவை களுக்காக சட்டத்தையும் ஒழுங்கையும் எப்படியெல்லாம் சுயநலத்தோடு பயன்படுத்துகின்றது என்பதை அம்பலப்படுத்த இதுவொரு நல்லவாய்ப்பாகவே அமை யும். அதற்கான தீர்ப்பை மக்கள் தேர்தலின்போது வழங்குவார்கள்.

## கற்பகதரு என்னும் அற்புதம்

# பனங்கொட்டை வருகிறது

அங்கம் – 30



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



பனங்கிழங்கினைப் பச்சையாகவும் சாப்பிடலாம். அவித்தும் சாப்பிடலாம். நெருப்பில் தோலுடன் சுட்டும் சாப்பிடலாம். ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகையான சுவையினைத்தந்தே நிற்கும் என்பதுதான் இங்கு முக்கியமாகும். நெருப்பில் சுட்டுச் சாப்பிடும் பொழுது காணப்படு கின்ற சுவை ஒரு தனிச்சுவைதான். நகரத்தாருக்கு இந்த அனுபவம் என்பது புதிதாகவே இருக்கும். பனைகள் சூழ்ந்து காணப்படும் கிராமங் களில் இருக்கின்றவர்கள் தங்கள் வீட்டு பனம்பாத்தியிலே பிடுங்கிய கிழங்கை அங்கேயே உடனே நெருப்பு மூட்டிச் சுட்டுச் சாப்பிடுவதில் பேரானந்தமே அடைந்து விடுவார்கள்.பனம்பாத்தியிலே கிழங்கைப் பிடு ங்கி அருகிலேயே நெருப்பை மூட்டி அதில் கிழங்கினைச் சுட்டுச் சாப்பிட்டமை இன்றும் என் மனதில் பதிந்து போய் இருக்கிறது. அது ஒரு ஆனந்தமான காலம்.அந்தக் காலத்தை எண்ணிப் பார்ப்பதே ஒரு தனிச்சுகந்தான்.



பனங்கிழங்கினைக் காத்துநிற்கும் தோலினை அகற்றி அதனை நன்றாக நீரில் கழுவி மண்பானையிலோ அல்லது அலுமினியம் பானையிலோ நீரைவிட்டு அதில் கழுவிய பனங்கிழங்கினை வைத்து அவிப்பது வழ க்கமாகும். இப்படி அவித்த பனக்கிழங்கை யாவரும் விருப்பதுடன் சாப்பிடுவதும் நடைமுறையான ஒரு பழக்கமாகவே இருக்கிறது. அவித்த கிழங்கினைச் சிறு சிறு துண்டுகளாக்கி அதனுடன் , மிளகு, அல்லது பச்சைமிளகாய், தேங்காய்த் துருவல், உப்பு , ஆகிய வற்றைச் சேர்த்து உரலில் துவைத்து அதனைக் கைகளால் உருண்டையாகப் பிடித்து வீட்டிலிருக்கின்றவர்கள் சுவைத்துச் சாப்பிடுவார்கள்,பல வீடுகளில் ஒரு வேளை உணவாகவே இந்தப் பங்கிழங்குத் துவையல் இருந்திருக்கிறது. சிறிய வயதில் எங்கள் அம்மா இப்படித் துவைத்த துவையலை உருட்டித்தர அதனை ஆசையாகச் சாப்பிட்டு விட்டு பாடசாலைக்கு போனது மனதில் அப்படியே பதிந்து போயிருக்கிறது, பனங்கிழங்குத் துவையல் காரசாரமாகவே இருக்கும்படி அம்மா செய்வார். அந்தச் சுவையினை இப்போது நினைத்தாலும் வாயூறும்.







பனங்கிழங்கினைக் கிழித்துப் பச்சையாக வெய்யில் காயவைத்து எடுப்பதும் ஒடியல்தான். அப்படிக் காயவிட்டு எடுக்கும் ஒடியல்தான் மாவாக்கப் பட்டுக் கூழாக , பிட்டாக ஆக்குவதற்கு மூலமாக ஆகிறது. பனங்கிழங்கினை அவித்து அதனை இரண்டாகப் பிளந்து வெய்யிலில் காயவிட்டு எடுக்கும் பொழுது அது புழுக்கொடியல் என்னும் பெயரினைப் பெற்று நிற்கிறது. அதாவது புழுங்கிய நிலையில் பனங்கிழங்கு இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றதோ என்றுதான் எண்ணிடக் கூடியதாக இருக்கிறது.

அவித்த பனங்கிழங்கினை இரண்டாகப் பிளந்து வெய்யிலில் காயவிடும் முறையினை விட , அவித்த கிழங்கினைக் கிளிக்காமலே அதனை வட்ட வட்டமாக வெட்டி அவற்றை வெய்யிலில் காய வைக்கும் இன்னுமொரு முறையும் இருக்கிறது. வட்டமாக நறுக்கிக

(7ஆம் பக்கம் பார்க்க..)

# நேற்று நிறைவடைந்தது தேசிய சாரணர் ஜம்போரி!





(எம். எப். றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்தாவது தேசிய சாரணர் ஜம்போரி திருகோணமலையில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று(திங்கட்கிழமை)யுடன் முடவடைந்துள்ளதது.

பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரீத் பெனாண்டோ தலைமையில் நடைபெற்ற இச்சாரணர் தேசிய ஜம்போ யில் இலங்கை நாட்டின் முதன்மைச் சாரணர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ச்சியாக ஏழு நாள்கள் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போரியில் பனிரெண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிய மற்றும் சர்வதேச நாடுகளிலிருந்து ஆயிரக்கணக் கான சாரணர்களும், சாரணியத் தலைவர்களும் பங்கு பெற்றிருந்ததோடு இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்-தும் சாரணர்கள், பெண் சாரணர்கள், திரி சாரணர்கள். குருளைச் சாரணர்கள். கடல் சாரணர்கள் என எல்லா வகையான சாரணர்களும் கலந்து கொண்டு ஒற்றுமையாக தங்களது சாரணர் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சாரணர் ஜம்போரி வரிசையில் ஒன்பதாவது தேசிய சாரணர் ஜம்போரி 2016 ஆம் ஆண்டு வடமா காணத்தின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று இருந்தது. அந்த வரிசையில் முதலாவது தேசிய சாரணர் ஜம்போரி 1952 ஆம் ஆண்டு கொழும்பிலும் இதே போன்று 1962 ஆம் ஆண்டு இரண்டாவது தேசிய சாரணர் கொழும்பிலும் நடைபெற்றன. மூன்றாவது தேசிய சாரணர்ஜம்போரி அனுராதபுரத்திலும் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது.

நான்காவது தேசிய சாரணர் ஜம்போரி குருநாகலில் 1992 ஆம் ஆண்டும் ஐந்தாவது தேசிய சாரணர் ஜம்போரி 1998 ஆம் ஆண்டு கண்டியிலும் ஆறாவது தேசிய சாரணர் ஜம்போரி 2022 ஆம் ஆண்டு பலப்பிட்டிலும் நடைபெற்றன.

அத்துடன் ஏழாவது தேசிய சாரணர் ஜம்போரி நுவரலியாவில் 2006 ஆம் ஆண்டும், எட்டாவது தேசிய சாரணர் ஜம்போரி 2010 ஆம் ஆண்டு அம்மாந்தோட்டை அங்குன கொலபெலஸவிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மிதிபலகைப் பயணங்களால் யாழில் இருவர் சாவு பொறுப்புடன் செயற்படவில்லை என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் பஸ்களின் மிதிபலகையில் இருந்து தவறி விழுந்து கடந்த வாரம் மாத்திரம் இரண்டு மரணங்கள் பதிவான நிலையிலும் அதனை யாரும் கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயற்படுவதாக தெரியவில்லை எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரில் இருந்து காரைநகர் நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பயணிகள் பஸ் மிதிபலகையில் தொங்கியவாறு சென்றநிலையில் அருகில் தரித்து நின்ற வாகனத்துடன் மோதி கீழே விழுந்துள்ளனர்.

இதனை அவதானித்த அங்கிருந்த பொது மகனொருவர் எடுத்த காணொளி தற்போது சமூக வலைத்தளங்களில் பரவிவருகிறது.

இவ்வாறு பஸ் மிதிபலகையில் தொங்கியவாறு சென்று விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு நடந்தால் யார் பொறுப்பு. விபத்து இடம்பெற்ற பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்காது, விபத்து ஏற்படுவதற்கு முன்னர் இவ்வாறு பஸ்களில் தொங்கியவாறு சென்றால் பஸ் சாரதி மற்றும் நடத்துநருக்கு எதிராக போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ள பொதுமக்கள், வீதிகளில் மறைந்து நின்று குற்றம் நிகழ்ந்த பின்னர் தண்டப்பணம் அறவிடும் போக்குவரத்து பொலிஸார், ஒழுங்காக கடமையைச் செய்தால் இவ்வாறு அசம்பாவிதங்கள் ஏற்படா. - என்றனர்.

கடந்த 19 ம் திகதி அல்லைப்பிட்டியில் மூதாட்டி ஒருவரும் கடந்த 23 ஆம் திகதி நல்லூர் பகுதியில் இளைஞர் ஒருவரும் பஸ்ஸில் இருந்து விழுந்து உயிரிழந்தனர்.

அதிக பயணிகளை யார் ஏற்றுவது என்பதில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் மற்றும் தனியார் பஸ'கள் இடையேயான போட்டி காரணமாக விபத்து, உயிரிழப்பு என பல அசம்பாவிதங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பொதுப் போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பஸ் உரிமையாளர்கள், பஸ் சாரதிகள், பொலிஸார், போக்குவரத்து பொலிஸார், பயணிகள், பொதுமக்கள் என அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்வதே இன்னுமோர் உயிரிழப்பைத் தடுக்க உதவும். (05)

# முலைத்தீவு – தேராவில் குளத்து மேலதிக நீரினால் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான தீர்வுகள்





தேராவில் குளத்து மேலதிக நீரால் பாதிக்கப்பட்டு இரண்டு மாதங்களாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தீர்வு வழங்கும் விதமாக முல்லைத்தீவில் வெள்ள நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் மாவட்ட அரசாங்க அதிபரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேராவில் குளத்தின் மேலதிக நீரினை வெளியேற்றுவதற்கான செயற்றிட்டம் லைக்கா ஞானம் அறக்கட்டளை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பங்களிப்புடன் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேராவில் குளத்து மேலதிக நீரினை வெளியேற்றும் இத்திட்டத்துக்கான பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து வைக்கபபட்டது.

அதனை தொடர்ந்து கனரக இயந்திரம் கொண்டு நீரை வெட்டி அகற்றும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேராவில் குளத்து நீர் நிரம்பி மேலதிக நீரால் குளத்துக்கு அருகில் இருந்த 17 குடும்பங்களும் பாதிக்கப்பட்டு, சுமார் இரண்டு மாதங்களாக இடைத்தங்கல் முகாமில் தங்கிவரும் நிலையில், இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்தன், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் உபதலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான சு.அருமைநாயகம், கமநல சேவை திணைக்கள உதவிப் பணிப்பாளர் பரணிதரன், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் க.அரங்கன், வனவள திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557



# மட்டக்களப்பில் 15 வயது சிறுமி ஒருவர் கடத்தல்: 18 வயது காதலனும் அவரது சிறியதாயும் கைது

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியைக் கடத்திச் சென்ற 18 வயது இளைஞனையும் அவரது சிறிய தாயாரையும் பொலிஸார் வாகரையில் வைத்து சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர். கடத்தப்பட்ட சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர். கொக்குவில் பொலிஸ் பிரிவில் வசித்து வந்த சிறுமி கடந்த 7 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற நிலையில் அவர் வீடு திரும்பாததையடுத்து அவரது உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

இதையடுத்து கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின் போது குறித்த சிறுமியை அவரது காதலன் வாகரைப் பிரதேசத்திலுள்ள அவரது சிறியதாயாரின் வீட்டிற்கு கடத்திச் சென்று வைத்துள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த வீட்டை சுற்றுவளைத்த பொலிஸார் சிறுமியை மீட்டதுடன் கடத்தல் குற்றச்சாட்டில் 18 வயதுடைய காதலனையும் அவருக்கு உடந்தையாகச் செயற்பட்ட 47 வயதுடைய சிறிய தாயாரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (05)

# நூல்வெளியீடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எழுத்தாளர் முஹம்மட் சாலிஹீன் எழுதிய ' வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்' என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வளிமண்டலவியல் கேட்போர் கூடத்தில் நூலாசிரியரின் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் ,உயர் நீதிமன்ற நீதிபதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் ,இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஸிம் உமர் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறை தலைவி பேராசிரியை பரீனா றுசைக், அமானா வங்கி பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மட் அஸ்மிர், சுங்க திணைக்கள மேலதிக பணிப்பாளர் சம்சுதீன் நியாஸ் ஆகியோரும், விஷேட அதிதிகளாக இலங்கை ஷரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் யூ.எல்.யாக்கூப், சிரேஸ்ட அறிவிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், மௌலவி எம்.ஆர்.அப்துல் றஹ்மான், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜௌபர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன் போது நூலின் முதல் பிரதியை இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஸிம் உமர் பெற்றுக்கொண்டார். (05)

# போதை அடங்கிய மாத்திரைகளுடன் கொட்டாஞ்சேனையில் ஒருவர் கைது

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் 50 லட்சம் ஷரூபா பெறுமதியான 2180 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இவர் கைது செய்யப்பட்டார் எனக் கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 38 வயதான கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். (05)

# புதுக்குடியிருப்பில் நான்கு பேர் கைது

இருவேறு பகுதிகளில் நான்கு உடும்புகளை வேட்டையாடிய மூன்று சந்தேக நபர்களும் மற்றும் ஆமையை வேட்டையாடிய சந்தேக நபர் ஒருவரும் என நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குயிருப்பு பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் கடந்த ஞாயிற்றுக்கிழமை புது குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக புதுக்குடியிருப்பு பகுதியில் நான்கு உடும்புகளை வேட்டையாடிய குற்றச்சாட்டில் மூன்று சந்தேக நபர்களும் ஆமை ஒன்றிய வேட்டையாடிய சந்தேக நபர் ஒருவரும் இருவேறு பகுதிகளில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் போலீஸ் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புது குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05 -113)

# தாயின் பிரிவால் துயரமடைந்த மகன் மாரடைப்பால் உயிரிழப்பு

தாயின் மரணத்தால் மிகவும் துயரமடைந்து காணப்பட்ட அவரது மகன், தனது தாயார் உயிரிழந்து சில மணித்தியாலங்களில் திடீர் மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் இந்துருவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. இந்துருவ, அகாடகொட, கல்தரமுல்லையில் வசித்து வந்த 71 வயதுடைய ஏழு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மகன் 47 வயதான ஒரு பிள்ளையின் தந்தையாவார், இவரின் தாய் கடந்த 22ஆம் திகதி உயிரிழந்தமையால் அவரது மகன் மிகுந்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்திருந்தார் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

(05)

# கற்பகதரு என்னும் அற்புதம்....................

காய விட்டு எடுப்பதால் இவற்றைத் தோட்டுப் புழுக்கொடியல் என்றும் , சீவற் புழுக்கொடியல் என்றும் பெயரினைக் கொடுத்திருக்கிறார்கள். புழுக்கொடி யலாக மாறிய நிலையில் அதனை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைக்கக்கூடியாக இருக்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.புழுக்கொடியலை மாவாக்கி அதனுடன் பனங்கட்டி , அல்லது சர்க்கரை, சேர்த்து தேங்காய்ப் பூவினையும் கலந்து குழைத்துச் சாப்பிடும் பொழுதும் அது ஒரு தனியான சுவையாகவே இருக்கும். தேங்காய்ப் பூவுக்கும் பதிலாக தேங்காய்ப் பாலினையும் அதனுடன் பனங்கட்டியையும் சிறிது நீரையும் சேர்த்துப் பிசைந்து உருண்டையாகப் பிடித்து தட்டங்களில் வைக்க வீட்டில் யாவருமே விருப்ப மாய் சாப்பிட்டு மகிழுவதைக் காணலாம்..சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை யாவருமே விரும்பிச் சாப்பிட்டார்கள் என்பதை மனமிருத்தல் வேண்டும்.இப்படியாய் அமையும் புளுக்கொடியல் மாவின் உருண் டைகளை ஒருவேளை உணவாக எடுத்தமையும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற மக்கள் ஒடியலை தங்களின் உணவாக நெடுங்காலமாகவே பழக்க த்தில் வைத்திருந்திருக்கிறார்கள் என்று அறியக் கூடியதாக இருக்கிறது.ஒடியலானது எங்களின் பாரம் பரிய உணவாகவே இருந்திருக்கிறது. இன்றும் பலரும் விருப்பத்துடன் ஒடியலை உணவாக்கி நிற்கிறா ர்கள் என்பதும் நோக்கத்தக்கது. எனினும் இளஞ் சந்ததியினருக்கு ஒடியலின் அருமை இன்னுமே தெரியா மல் இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.விதம் விதமாய் கவர்ச்சிகரமான பக்கற் று களில் வண்ண மயமாய் வருகின்ற போஷாக்கற்ற உணவுப் பதார்த்தங்களை , நவ நாகரிகம் என்னும் மோகத்தில் வாங்கிச் சுவைத்து மகிழும் இளைசுகளுக்கு ஒடியல் உணவின் மகத்துவத்தை அறியச் செய் வது மிக மிக அவசியமானதேயாகும்.

ஒடியலைச் சாப்பிடுவதால் என்ன பயன் ஏற்படும் என்று எண்ணிடத் தோன்றுகிறதல்லவா ? ஒடியலிலே மாச்சத்தும் , நார்ச்சத்தும் நிறையவே காணப்படுகிறது. அதேவேளை கொழுப்புச்சத்தும் , புறோட்டினும் குறைவாகவே காணப்படுகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். அதே வேளை சோடியம்,பொட்டாசியம், கல்சியம், மங்கனீசியம், இரும்புச் சத்துக்கள், போன்ற கனியுப்புகளும் இதில் நிறைந்திருப்பதும் கருத் திருத்த வேண்டியதேயாகும்.

அரிசியையும் , கோதுமையினையும் நாளாந்த உணவாக எடுப்பது வழக்கமாகவே காணப்படுகிறது. அரிசியிலும் , கோதுமையிலும், காணப்படுகின்ற மாப்பொருளின் அளவினைப் பார்க்கையில் ஒடியலில் காணப்படும் மாப்பொருளும் கிட்டத்தட்ட நெருக்கமாய் வருவது தெரிகிறது. அரிசியைவிடக் கூடுதலான தாதுப்பொருட்களை ஒடியல் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒடியலில் மிகவும் கூடுதலாக அதா வது அரிசியையும் , கோதுமையையும் விடக் நார்ச்சத்து நிறைந்திருக்கிறது என்பதுதான் இங்கு மிகவும் குறிப்பிடப் பட வேண்டிய கருத்தாக அமைகிறது.

பனங்கிழங்கினை ஒடியலாகப் பதப்படுத்தி வைக்கும் பொழுது அதனை உடனடித் தேவைக்கும் பயன் படுத்தலாம், பல நாட்கள் கட ந்த பின்பும் பயன்படுத்தலாம். புழுக்கொடியலாக்கியும் , மற்றைய ஒடிய லாக்கிய நிலையிலும் பயன்படுத்தும் நிலையில் பனங்கிழங்கில் அமைந்திருக்கிறது.

புழுக்கொடியல் மாவினைக் கொண்டு பல உணவுப் பொருட்கள் இன்று தயாரிக்கப்படுகின்றன. அந்த வகையில் தற்போது வந்திருப்பதுதான் “பாம்போஷா” ஆகும்.இது சிறுவர்கள், கற்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்றதாக இருப்பதோடு , போசாக்குக் குறைந்தளவில் காணப்படுகின்ற யாவருக்குமே பொருத்தமானதாக இருக்கும் என்று கருதப்பட்டு இப்பொழுது பனை அபிவிருத்திச்சபையினால் விற் பனை செய்யப்படுகிறது. பனை அபிவிருத்திச் சபையின் விற்பனைக் கூடமாகிய கற்பகத்தில் பாம் போஷாமா பக்கற்றுகள் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்படிருக்கிறது என்பது மட்டுமல்ல, பலரும் அதனை விருப்பத்துடன் வாங்கிச் செல்லுமளவுக்கு செல்வாக்கினைப் பெற்றிருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டிய விடயமெனலாம்.

புழுக்கொடியல் மாவினைக் கொண்டு புழுக்கொடியல் கேசரி, அல்வா, பான்கேக், லட்டு, பிஸ்கட் , வடை, பான்ஸி கேக், பட்டர் கேக், என்று பல வகைகளில் உணவுப்பதார்த்தங்கள் செய்யலாம் என்பதும் தற்பொழு செய்து பயன்படுத்தப்படுகிது என்பதும் சுவையான செய்தியாய் அமைகிறது அல்லவா !

ஒடியல் மாவானது சுவையினைத் தருவதாக இருந்தாலும் அதில் ஒரு காறல் தன்மை இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. இந்தக் காறல் பனம் பழத்திலும் இருக்கிறது. காறலும் ஒருவித சுவையாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.ஒடியல் மாவினை நீரிலே அரைமணித்தியாலம் ஊறவிட்ட பின் அதனை வடி துணியினால் வடித்து எடுக்கும் பொழுது அதன் காறல் அகன்று விடுகிறது. அதன் பின் அந்த மாவினைப் பயன் பாட்டுக்கு எடுக்கும் முறையே நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என்று அறிகின்றோம்.

ஒடியல் மாவில் கூடுதலான மாப்பொருள் அடங்கிருக்கிறது என்று பார்த்தோம். அந்த மாப்பொருளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தியதால் நல்ல முடிவுகள் சில கிடைக்கப் பெற்றிருக்கின்றன.இவ்வாய்வின் வெளிப்பாடாக, மாக்களி , திரவகுளுக்கோசு, வெதுப்பக மதுவம் , மதுபான உற்பத்தி ஆகிய கண்டறிப்பட் பட்டி ருக்கின்றன. கண்டறிப்பட்ட வெதுப்பக மதுவத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பாணானது இறக்குமதி யான வெதுப்பக மதுவத்தைப் பயன்படுத்திச் செய்யப்ப ட்ட பாணைவிடத் தரமாக வந்ததாக அறிந்திட முடிவது ஆரோக்கியமான தகவலாக அமைகிறது அல்லவா ! தற்போது பேக்கறிக்கு பயன்படுத்துகின்ற மாவுக்குப் பதிலாக ஒடியல் மாவினையே பயன்படுத்தி அனைத்து வகையான பேக்கரி உணவுப் பதார்த் தங்களைச் செய்யமுடியும் என்னும் செய்தியும் மனமிருத்த வேண்டிய செய்தியாகவே இருக்கிறது.ஒடியல் மாவினால் உணவுப் பண்டங்கள் மட்டு மன்றி வைட்டமின் மாத்திரைகளும் தயாரிக்கப்படுகின்றன என் பதும் குறிப்பிடத்தக்கதாகும். வைன் , பியர் , என்பனவும் உற்பத்தி செய்வதற்கும் ஒடியல் மா உதவுகிறது.

காறல்தன்மை என்பதைப் பலரும் விரும்புவதில்லை. நீரில் ஊற வைத்துக் கழுவி வடிகட்டுவதன் மூலம் காறல் தன்மை அகற்றப்பட்டு விடுகிறது.ஒடியல் மாவானது நீரில் ஊறவிட்ட பின்னர் வடி கட்டும் பொழுது ஊறிய நீர் மஞ்சள் நிறமாக வருவ தைக் காணலாம்.அந்த மஞ்சள் நிறம் கழுவப்பட்ட பின்னர் காறல் தன் மை அங்கே தணிந்தே போய்விடுகிறது. பின்னர் ஒடியல் மாவினைப் பயன் படுத்திச் செய்யப்படும் உண வுகள் தனிச்சுவையினைத் தருவதாகவே இருக்கும்.

ஒடியலிலே ஒருவித நச்சுத்தன்மை இருப்பதாக ஆராய்ச்சி மூலமாகத் தெரியவந்தது. ஆனால் அந்த வகையில் செய்யப்பட்ட ஆராய்ச்சியானது சரிவர நிஷரூபணம் ஆகவில்லை. நச்சுத்தன்மை பற்றிய இன் னொரு ஆராய்ச்சியால் முன்னர் கூறிய கூற்றானது பொருத்தமற்ற கூற்றாகவே ஆகிவிட்டது. நச்சுத்தன் மையானது காணப்பட்டாலும் அந்தப் பொருளை கழுவுவதால் , நீராவியில் அவிப்பதால் அந்தத்தன்மை அற்றே போய்விடுகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.ஒடியல் மாவினை எங்களின் முன்னோர்கள் நெடு ங்காலமாகவே தங்களின் உணவாகவே எடுத்து வந்திருக்கிறார்கள். ஒடியலால் ஆகிய உணவுகளை உண்டு அவர்களெல்லாம் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருந்திருக்கிறார்கள் என்பதை மனமிருத்துவது அவசியமாகும். நச்சுத்தனை அடங்கி இருக்குமாயின் அவர்கள் திட காத்திரமானவர்களாக வாழ்ந்திருக்க முடியுமா என்று எண்ணிப்பார்க்கத்தானே வேண்டும், ஆராய்ச்சிகள் என்பது முழுமை அடையா நிலையில் சில வேளைகளில் தவறான புரிதலுக்கு வழி காட்டியும் விடலாம் என்பதைத்தான் இங்கு மனங்கொள்ளல் வேண்டும்.

பனங்கிழங்கானது ஒடியலாகு முன்னர் தோலுடன் கூடியதாகவே இருக்கும் என்பது எல்லோருக்குமே தெரியும். பனங்கிழங்கினுக்குப் பாதுகாவலனாய் அமையும் அந்தத் தோலுக்கு தோகை என்று பெயர் சூட்டப்ப ட்டது என்பதை ஆரம்பத்தில் பார்த்தோம். இந்தத் தோகையும் பயனளிக்கும் ஒன்றாகவே இருக்கிறது என்ப தையும் குறிப்பிடாமல் இருக்கவே முடியாது.பனையிலிருந்து இறக்கப்படுவது பதனீர். இதனை மண்ணால் செய்த முட்டிகளில் வைப்பதுதான் வழக்கம். அப்படி வைக்கும் பொழுது அந்த மண்முட்டிகளின் கீழ் , முட்டி களைச் சூடாக்குவதற்காக எதை வைக்கிறார்கள் தெரியுமா ? அது வேறு எதிவுமே அல்ல. கிழங்கின் மேலி ருந்து உரிக்கப்பட்ட தோகையேயாகும். முட்டிக்குச் சூடேற்றப் பயன்பட்ட தோகை எங்களின் கட்டிடத்

தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சீமெந்து வராத காலத்தில் சுண்ணாம்பினைக் கொண்டு தான் கட்டிடங்கள் கட்டப்பட்டன. அப்படிக் கட்டப்படுகின்ற வேளையில் இந்தத் தோகை கட்டிடத் தேவைக ளுக் குப்பயன்படுத்தப்பட்டது என்பதும் கருத்திருத்த வேண்டியதே. அது மட்டுமன்றி கிணறுகள் கட்டப்ப டும் பொழுதும் இந்தத் தோகை பயனாகி இருந்திருக்கிறது. இப்படிப் பயனப்டுத்தப்பட்ட தோகையானது ஐம்பது வருடங்கள் கடந்தபின்னரும் உக்காமல் இருந்திருக்கிறது என்று அறியும் பொழுது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா.

பனங்கிழங்கினை இரண்டாகப் பிளக்கும் பொழுது அதன் நடுவில் நரம்பு காணப்படும். அந்த நடு நரம் பினை நாமெவருமே ஒரு பொருட்டாக எடுப்பதேயில்லை. ஆனால் அந்த நடு நரம்பு இப்பொழுது கைப்பப் ணிப் பொருளுக்கு மூலமாகி விட்டது. நடு நரம்பு மிகவும் மென்மையாக இருக்கும்.அந்த நரம்பிபினில் இருந்து நார் எடுக்கப்படுகிறது. அந்த நாரினால் பெண்களுக்கான சுருக்கும் பைகள் செய்கிறார்கள் என் பது இன்னுமொரு ஆச்சரியமான செய்தியாகயாகும். (வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# மு.கா. கட்சியின் சீரமைப்புப் பணிகளை ஏப்ரலுக்குள் முடிவுக்கு கொண்டு வருக

## ஹக்கீம் வலியுறுத்து



(கே எ ஹமீட்)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைலத்திட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் எம்.பி. அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காணாங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புகுழுவைப் பணித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான விஷேட கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் எம்.பி. தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை,அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 226 கிராம சேவகர் பிரிவுகளில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிளும் கட்சி கிளை,இளைஞர் கிளை,மகளிர் கிளை புனரமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.சம்மாந்துறை தொகுதியில்-216கட்சி கிளைகளும்,பொத்துவில் தொகுதியில்-321 கட்சி கிளைகளும்,கல்முனை தொகுதியில்-141 கட்சி கிளைகளும் மொத்தமாக 678 கிளைகள் புனரமைக்கப்படவுள்ளன எனவும்,இதில் சம்மாந்துறை தொகுதியில் 37 கட்சி கிளைகளும்,பொத்துவில் தொகுதியில் 52 கட்சி கிளைகளும்,கல்முனை தொகுதியில் 35 கட்சி கிளைகளும் மொத்தமாக 124 கிளைகள் மாத்திரம் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளது.மிகுதியாக புனரமைக்கப்படவுள்ள 554 கிளைகள் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் நிறைவுபெற்ற கிராமங்களில் விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் எம்.பியால் மத்திய குழுக்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிப்பது என தீர்மானிக்கப்பட்டது. (05)

# இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று பன்னூலாசிரியர் எம். ஐ. மதினா உம்மாவின் 16 ஆம், 17 ஆம் நூல்களான கவிதை தொகுப்புகள் அடங்கிய 'வாழ்வை நிகர்த்த வானவில்'மற்றும் 'கலை' ஆகிய இரு நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சேவையர் ஏ.முகைதீன் பாவா தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு ஆய்வாளர் சிராஜ் மக்/ர் பிரதம அதிதியாகவும், பிரதேச செயலாளர்களான அல்ஹாபீல் எம். எஸ். எம். றஸ்ஸான் மற்றும் ஏ.சி. ஏ அப்கர் ஆகியோர் கௌரவ அதிதிகளாவும், பிறை எப். எம் கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் ஹையூம், எழுத்தாளர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் நூல் நயவுரையை அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதி கல்வி பணிப்பாளர் அ. ஸ. அஹமட் கியாஸ் நிகழ்த்தினார். இதேவேளை நூலின் முதல் பிரதிநிதியை நூல் ஆசிரியரால் யூ. எல். அஹமட் மஸாஹிருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் நூல் ஆசிரியருக்கு அக்கரையூர் அப்துல் குத்தூஸ் தம்பதியினரால் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. (05)

# யாழ்ப்பாணத்தில் தீ மூட்டி மோட்டார் சைக்கிள் எரிப்பு!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குப்பட்ட கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள நகை கடைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிக்கப்பட்டது.

தீ மூட்டியவர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை செலுத்தி செல்வது அருகில் உள்ள சிசிரிவி கமராவில் பதிவாகி உள்ளது.

முன்பகை காரணமாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடையவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தடியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் கொலை

தர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் கடந்த 20 .02 2024 அன்றைய தினம் தனது வீட்டில் படுத்து உறங்கிய நிலையில் இனம் தெரியாத ஒருவரினால் பாரிய தடி ஒன்றினால் முகம் மற்றும் தலைப்பகுதியில் தாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அங்கிருந்து அதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஆகிய நடராசா ரவிக்குமார்

வயது44 சுண்டிகுளம் கல்லாறுபகுதியை வசித்து வந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவராகி உள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தருமபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05 - 113)

# கலைமகளில் கால்கோள் விழா

(வி.ரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான தரம்-1 இற்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் வித்தியாரம்ப நிகழ்வு புதிதாகக் கடமையேற்ற அதிபர் க.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அதிபர் அவர்களை ஆசிரியர்கள்,மாணவர்களால் பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டார்.

விழாவில் ஆன்மீக அதிதியாக வேம்பையடிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவசிறி நேசராசா குருக்கள் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் அப்பாடசாலையின் பாடசாலை சமூகம் பிரதி அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.(05)

# மூதூர் பிரதேச செயலகத்தில் அசுவசும கருமபீடம் திறப்பு

(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பொதுமக்களின் அசுவசும கொடுப்பனவு தொடர்பான வேலைகளை மக்கள் இலகுவில் மேற்கொள்வதற்காக பொதுமக்களின் நன்மைகருதி இதுதொடர்பான நடவடிக்கைகளை இலகுவில் மேற்கொள்ளவென மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுண்டுவருகின்றார். இதன் பிரகாரம் இதற்கென பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதனையும் வருகை தரும் பொது மக்களையும் படங்களில் காணலாம். (05)

## உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு

# கல்முனையில் பெரும் பற்சிகிச்சை முகாம்

(பாறுக் ஷிஹான்)

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த மாபெரும் பற்சிகிச்சை முகாம் வெள்ளிக்கிழமை பெரியநீலாவனை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் கிழக்கு மாகாண கிளையின் ஒருங்கிணைப்பில் மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல் எனும் தொனிப்பொருளில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.சஷரூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இதன்போது நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பீ. அப்துல் வாஜித், கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், இலங்கை பல் மருத்துவர் சங்கத்தின் கிழக்கு மாகாண தலைவர் வைத்தியர் ரீ. கேதீசன், செயலாளர் வைத்தியர் எஸ்.லிவிட்டன் உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள், பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பல் மருத்துவ சங்கத்தின் வருடாந்த மாநாட்டைத் தொடர்ந்து இடம்பெற்ற பற்சிகிச்சை மருத்துவ முகாமில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெருமலவிலானோர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். அதனைத் தொடர்ந்து வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றும் இடம்பெற்றது.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு அதற்கு முன்னுள்ள மாதத்தையும் பின்னுள்ள மாதத்தையும் தேசிய வாய் சுகாதார விழிப்புணர்வு மாதங்களாக பிரகடனப்படுத்தி பல்வேறு வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இம்முறை கல்முனை பிராந்தியத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சேனையூர் மத்திய கல்லூரியில் 67ஆவது கல்லூரி தின நடைபவனி

(மூதூர் நிருபர்)

*பாடசாலை வளர்ச்சியில் எவ்வளவு உச்சங்களைத் தொடமுடியுமோ அவ்வளவு உச்சங்களையும் தொட்டு சாதனைபடுத்த திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு திஃமூஃ சேனையூர் மத்திய கல்லூரியின் 67 ஆவது ஆண்டுநிறைவையொட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்ட கல்லூரி தின விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்லூரி முதல்வர் சோ.பாக்கியேஸ்வரன் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது. இதனை கல்லூரி சமூகம் ஏற்பாடுகள் செய்திருந்தன.*

*பிரதான நிகழ்வு சேனையூர் மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பமான நடைபவனி மூதூர் கிழக்கின் பிரதான வீதியூடாக சேனையூர் கட்டபறிச்சான் கடற்கரைச்சேனை வீதிவழியாக இடம்பெற்றது.*

*கல்வி அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் இவ் நடைபவனியில் கலந்து சிறப்பித்திருந்தனர்.*

*பேரணியில் தமிழர் கலாசாங்களை பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, வாகனங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமான பதாதைகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டதோடு முன்னர் கல்லூரியில் கடமையாற்றிய அதிபர்களின் உருவப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.*

*இதன்போது சேனையூர் மத்திய கல்லூரியில் ஆயிரக்கணக்கான பழைய மாணவர்கள் தங்களது வகுப்புகளை வேறுபடுத்திக்காட்டும் வகையில் மேலங்கிகளை அணிந்து பேரணியில் கலந்து சிறப்பித்திருந்தனர். மாணவர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.*

*இதில் பிரதம விருந்தினராக மூதூர் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எம்.ஐ.எம்.நளீம் கலந்துகொண்டதோடு சிறப்பு விருந்தினர்களாக பிரதிக்கல்விப்பணிப்பாளர் தே.ஜெயந்தன், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எஸ்.ஜே.துசார, கௌரவ விருந்தினராக கோட்டக்கல்விப்பணிப்பாளர் க.அம்பிகை பாகன் ஆகியோரும் இன்னும் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (05)*




# கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளர் கடமையேற்பு

(அஸ்லம் எஸ் மௌலானா)

கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள வை. ஹபீபுல்லாஹ் நேற்று (திங்கட்கிழமை) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.



இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி உட்பட பிரிவுத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது மாநகர ஆணையாளர் தலைமையில் உத்தியோகத்தர்கள் அனைவரும் பதில் கணக்காளரை வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளராக கடமையாற்றி வருகின்ற ஹபீபுல்லாஹ் அதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரால் கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அங்கு உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில் - இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 இற்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர்.

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்களை 73 பேருக்கு முதற் கட்டம் வழங்கி வைக்கப்பட்டன. ஒருவருக்கு ஓர் ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக ஓர் ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிரந்தளிக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# நெருக்கடி கலை முகாமைத்துவம் வழிகாட்டி கைந்நூல் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

நெருக்கடி கலை முகாமைத்துவம் என்ற வழிகாட்டி கைந்நூல் கையளிப்பு சாய்ந்தமருது குவாஷி நீதி மன்ற கட்டடத்தில் நடைபெற்றது.

இதன் போது ஓய்வு பெற்ற உதவி கூட்டுறவு ஆணையாளரும் சாய்ந்தமருது குவாஷி நீதி மன்றத்தின் நீதிபதியுமான அஹமது லெவ்வை ஆதம்பாவா சாய்ந்தமருது பெரும் குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப- பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.எம் றஊப்பிற்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது குவாஷி நீதி மன்ற உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

## காணிப் பத்திரங்களைக் கேட்டு

# பொத்துவில் கனகர் கிராம மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் மீள்குடியேற்ற கனகர் கிராமத்தில் பொதுமக்கள் நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

கடந்த பல வருட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு அண்மையில் 73 குடும்பங்களுக்கு காணி பத்திரம் வழங்கப்பட்டது. இப் பத்திரங்கள் ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது .இதனைக் காரணங்காட்டி அனைவருக்கும் காணி பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று நேற்று கனகர் கிராம மக்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலாளர் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் . எமக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்க வேண்டும். காலாகாலமாக இருந்து வந்த எமது பூர்வீக காணிகளை விரைவாக பூரணமாக ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

33 வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் பூரணமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் உள்ளிட்ட பல பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர். (05)

# சர்வதேச மாநாட்டின் நுழைவுச்சீட்டு தென்கிழக்கு பல்கலையில் அறிமுகம்

(கே.எ.ஹமீட்)

எதிர்வரும் 2024.02.29 ஆம் திகதி இடம்பெறவுள்ள 12 ஆவது சர்வதேச மாநாட்டுக்கான நுழைவுச்சீட்டுக்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வும் பல்கலைக்கழக நினைவுச் சின்னத்திற்கு முன்பாகவுள்ள திறந்த வெளியில் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

உள்ளூர் தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் விரிவுரையாளர்கள் பிரதி நிதியாளர் என பலரும் கலந்து கொண்டிருந்த நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (05)






# விசேட தேவையுடையோருக்கு மூதூரில் நேற்று இலவச உதவி

(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விசேட தேவையுடையோருக்குத் தேவையான சக்கர நாற்காலிகளை நேற்று (திங்கட்கிழமை) மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் மற்றும் உத்தியோகத்தர்கள் இலவசமாகக் கையளிப்பதை படங்களில் காணலாம். (05)

# புதிய நிர்வாகம் புனரமைத்தல்

(எம்.எப்.றிபாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை புளக் ஜே கிழக்கு இரண்டாம் பிரதேசத்திற்கான கிளைக் குழுத் தெரிவுக் கூட்டம் சம்மாந்துறையில் நடைபெற்றது.

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், அ. இ. ம. காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளருமான ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அ. இ. மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கிளைக் குழுவின் புதிய தலைவராக அஸீஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், இளைஞர் அமைப்பின் தலைவராக ஐ. ஏ. ஆகிப்பும் 20 பேர் கொண்ட நிருவாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (05)

# முஹம்மது சம்லான் உலக சாதனை!

(அஹ்சன் அப்தர்)

28 மாதங்கள் அதாவது இரண்டு வயதும் நான்கு மாதங்களும் ஆன முகமது சபான் முஹம்மது சம்லான் என்ற சிறுவன், 35 நாடுகளும் அதனுடைய நாணயங்களையும் 46 வினாடிகளில் கூறி உலக சாதனை படைத்துள்ளார். இவர், வத்தளை ஹுனுபிட்டியவைச் சேர்ந்த பாத்திமா இபாஷா முஹம்மத் சபான் தம்பதிகளின் புதல்வராவார். (05)

# புதிய அமெ. தூதுவராக எலிசபெத் கே.கோர்ஸ்ட்

*இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக எலிசபெத் கே கோர்ஸ்ட் நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையில் புதிய தூதுவராக எலிசபெத் கே கோர்ஸ்ட் நியமிக்கப்படவுள்ளார்.*

*அமெரிக்க செனெட் இந்த நியமனத்திற்கு அங்கீகாரம் வழங்கினால் இந்த நியமனத்தை ஏற்க தயார் என இலங்கை தெரிவித்துள்ளது.*

*எலிசபெத் கோர்ஸ்ட் தற்போது பாக்கிஸ்தானிற்கான முதன்மை துணைச்செயலாளராகவும் துணைச்செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.*

*கிரிமியாவை ரஸ்யா ஆக்கிரமித்த காலப்பகுதியில் உக்ரைன் தூதரகத்தில் எலிசபெத்கோர்ஸ்ட் பணியாற்றியுள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# அரச நிறுவனங்களுக்குள் ஒருங்கிணைப்பு இன்மையால் அபிவிருத்தி தடைப்படுகிறது

## அமைச்சர் பிரசன்ன காட்டம்

அரச நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மையால் நாட்டின் அபிவிருத்தி தடைபடுவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்துகின்றார்.

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டில் மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றுக்குமிடையிலான கூட்டு அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருணாகல் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற குருணாகல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குருணாகல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்கும் போது மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் கிராமப்புற மக்களின் தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டுமென அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாக இந்த நிறுவனங்களுக்கிடையில் கூட்டு அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியமானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சில மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் மத்திய அரசு, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இணக்கப்பாட்டின்றி செயற்படுவதாகவும் மக்கள் பிரதிநிதிகளுக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுவதாகவும், இந்த இழுபறி காரணமாக மக்களுக்கு உரிய நன்மைகள் கிடைக்கப் பெறுவதில்லை எனவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

“மத்திய அரசு என்ன செய்கிறது என்பது மாகாண சபைக்குத் தெரியாது. மாகாண சபை என்ன செய்கிறது என்பது உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவதில்லை. எனவே, இந்த நிறுவனங்களுக்கு இடையே சரியான ஒருங்கிணைப்பு பேணப்பட வேண்டும். இல்லை என்றால் நாட்டின் அபிவிருத்தி தடைபடும். அனைத்து திட்டங்களும் கிராமியக் குழுக்கள் மூலம் கண்டறியப்பட வேண்டும். அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளும் அந்த குழு மூலம் செய்யப்பட வேண்டும். கிராம அளவில் திட்டங்களைக் கண்டறிவதில் சிக்கல் இருந்தால், அதை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கவும். அங்கிருந்து தீர்வு வழங்க முடியாவிட்டால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அனுப்புங்கள். அங்கிருந்து தீர்வு கிடைக்காவிட்டால் பிரதமர் இருக்கும் தேசியக் குழுவுக்கு அனுப்புங்கள். திட்டங்களை அடையாளம் காணும் போது, அவற்றை மத்திய அரசு, மாகாண சபை மற்றும் மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகள் என தனித்தனியாக அடையாளம் காணவும். ஆரம்பித்த திகதி மற்றும் முடிவுத் திகதி உள்ளிட்ட திகதிகளுடன் திட்டங்களை உருவாக்கவும். அப்போதுதான் நம் அனைவருக்கும் வேலை செய்வது எளிதாக இருக்கும்.” என்றும் கூறினார்.

நாட்டின் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மலைப் பத்தாண்டு எனப்படும் பத்தாண்டு கால பலநோக்கு கிராமப்புற மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 10,000 மில்லியன் ரூபாவாகும்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருணாகல் ஆகிய 10 மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குருணாகல் மாவட்டத்தின் மல்லவப்பிட்டிய, மாவத்தகம மற்றும் ரிதிகம ஆகிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 229 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

வாழ்வாதார மேம்பாடு, கல்வி, சுகாதாரம், மின்சாரம் மற்றும் வீடமைப்பு வசிகள் உள்ளிட்ட 10 பிரிவுகள் இத்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டங்களில் குருநாகல் மாவட்டம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இம்மாவட்டம் அளவிலும் மூன்றாவது பெரியது. வரலாற்று சிறப்பு மிக்க நகரம் என்று அழைக்கப்படும் குருணாகல் மாவட்டம், நாட்டில் நான்கு இராசதானிகள் இருந்த ஒரே மாவட்டமும் ஆகும்.

குருணாகல் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை 30 ஆகும். இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பிரதேச செயலகங்களைக் கொண்ட மாவட்டம் தற்போது பதினேழு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. இந்த மாவட்டத்தின் பொருளாதாரம் முக்கியமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது.

இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர்களான டி.பீ. ஹேரத், சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்சன் பெர்னாண்டோ, சுமித் உடுகும்புர, மஞ்சுளா திஸாநாயக்க, குருநாகல் மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.ஆர். ரத்நாயக்க, வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன மற்றும் அரச அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அரச நிறுவனங்களின் தொலைபேசிகளில் 71 வீதமானவை இயங்குவதே இல்லை

நாட்டிலுள்ள அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ தொலைபேசி இணைப்புகளில் 71 சத வீதமானவை முறையாகச் செயற்படவில்லை என பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பேராசிரியர் வசந்த அத்துகோரளவின் வழிகாட்டலின் கீழ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளி விபரவியல் திணைக்கள மாணவர்கள் குழுவினால் இது தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்தக் கணக்கெடுப்பின்படி, அரச நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ தொலைபேசி இணைப்புகளில் 29 சத வீதமானவை மட்டுமே சரியாக இயங்குவதாகவும் 49 சத வீதமானவை இயங்கவில்லை என்றும், 22 சத வீதமானவை செயற்பாட்டில் இருந்தாலும் யாருக்கும் பதிலளிப்பதில்லை என்றும் தெரியவந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ தொலைபேசி இணைப்புகள் இந்த கணக்கெடுப்புத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கணக்கெடுக்கப்பட்ட 276 பிரதேச சபைகளில் 98 பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, 14 சத வீதமான தொலைபேசி இணைப்புகள் இயங்கவில்லை, 42 சத வீதமானவை பதிலளிக்கப்படவில்லை. 44 சத வீதமானவை மட்டுமே பதிலளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளது.

மேலும் பதிலளிக்கப்பட்ட உத்தியோகபூர்வ தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக வழங்கப்பட்ட பதில்கள் தெளிவற்றதாகவும், கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எந்தப் பயனும் அல்லது பொருத்தமும் இல்லை என்றும் பேராசிரியர் அத்துகோரள மேலும் கூறினார். சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அதிகாரிகளும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# விமானப் படை தொழில்நுட்ப கண்காட்சி யாழ்ப்பாணத்தில்

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விமானப்படையின் கல்வி மற்றும் தொழிநுட்ப கண்காட்சியை நடாத்தவுள்ளது என விமானப்படையின் எயர் வைஸ் மார்சல் முடித மகவத்தகே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை விமானப்படை, தனது 73ஆவது வருட நிகழ்வை முன்னிட்டு, "நட்பின் சிறகுகள்" எனும் செயற்திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

இம்முறை வடமாகாணத்தை முன்னிலைப்படுத்தி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒருகட்டமாக "எனது புத்தகமும் வடக்கில்" எனும் தொனிப்பொருளில் 73 ஆயிரம் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் செயற்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அத்துடன் 73 பாடசாலைகளை புனர்நிர்மானம் செய்யும் செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளது. அதேவேளை வடக்கில் 73 ஆயிரம் மரக்கன்றுகளும் நடப்படவுள்ளன.

இந்நிலையில் மார்ச் 6 தொடக்கம் 10 வரையில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் "தொழிநுட்பம் , கல்வி மற்றும் அபிவிருத்தி" எனும் தொனிப்பொருளில் கண்காட்சிகள் நடத்தவுள்ளன.

கண்காட்சிகள் நடைபெறும் தினங்களில், விமானப் படையின் சாகச நிகழ்வுகள் கலை நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன.

இந்த கண்காட்சிகளுக்கு பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அனுமதிக்கப்படுவர். ஏனையோருக்கு நுழைவு கட்டணம் 100 ரூபாய். கண்காட்சிக்கு, 2 லட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்

ஜெட்விமான இயந்திரம் ஒன்றினையும் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தவுள்ளோம் கண்காட்சியின் முடிவில் அதனை யாழ். பல்கலைகழகத்திற்கு அன்பளிப்பு செய்யவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# இரு லொறிகள் மோதி விபத்து ஒருவர் சாவு இருவர் காயம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையிலான பகுதியில் இரு லொறிகள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை (26) அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் ரத்கம பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய லொறி சாரதியாவார்.

ரத்கம பிரதேசத்தில் இருந்து பேலியகொடை மீன் சந்தைக்கு மீன் கொள்வனவு செய்வதற்காக பயணித்த லொறி ஒன்று ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் இருந்து குருணாகல் பிரதேசத்திற்கு சீமெந்து ஏற்றிகொழும்பு பிரதேசத்தை நோக்கி பயணித்த மற்றுமொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து விபத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொடருந்து மோதி இளைஞர் இறப்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பகுதியில் தொடருந்து மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியவில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஆகாஸ் என்றழைக்கப்படும் அசோக்குமார் சனுஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பை நோக்கி ஞாயிற்றுக்கிழமை (25) இரவு பயணித்த இன்ரசிற்றி புகையிரதத்தில் கருவப்பங்கேணி பகுதி தண்டவாளத்தில் வைத்து புகையிரத்தில் குறித்த இளைஞன் மோதியதையடுத்து சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சடலத்தை பொலிசார் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் முன்னெடுத்துவருகின்றனர்.

# ஏற்றுமதி நோக்கத்திற்காக 2ஆவது இளநீர்க் கிராமம்

## முறுதவெல ரலுவ

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, இரண்டாவது இளநீர் செய்கை கிராமம் முறுதவெல ரலுவ கிராமத்திற்கு அருகாமையில் ஞாயிற்றுக்கிழமை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதிக்கு இளநீர் பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முறுதவெலயில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 10,000 இளநீர் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

இந்த வகையில் வாரத்திற்கு சுமார் 252,000 இளநீர்கள் நாட்டிலிருந்து ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் இளநீர் ஏற்றுமதி மூலம் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் (2023) ஆறு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது .

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இளநீர் ஒன்றின் விலை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு அமைய 2000 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் இருந்து அதிகபட்ச இளநீர் அறுவடை செய்வதற்காக, குறிப்பாக முறுதவெல பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இரண்டாவது இளநீர் செய்கை மாதிரி ரலுவ கிராமம் நிறுவப்பட்டுள்ளதுடன் அங்குள்ள விவசாயிகளுக்கு 1,600 இளநீர் கன்றுகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) விவசாய அமைச்சர் வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக வெப்பத்திலிருந்து மாணவரை பாதுகாக்க தேவையான அறிவுரை

## கல்வி அமைச்சு வெளியிட்டு

அதிக வெப்பநிலை காரணமாக ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆலோசனைகளைக் குறிப்பிட்டு கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை குறித்து அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் தெரியபடுத்துமாறு கல்வி அமைச்சு ,அனைத்து மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலில் மாணவர்களுக்கான விசேட குறிப்பிடுவதாவது ,

1. கறுப்பு நிற ஆடைகளை அணிவதை தவிர்க்கவும்
2. தொப்பி அணிந்து அல்லது குடையைப் பிடித்தவாறு வெயில் செல்லுங்கள்
3. வீட்டிலிருந்து செல்லும் போது சுத்தமான குடிநீரை எடுத்து செல்லவும்
4. அதிகளவில் தண்ணீர் அல்லது இளநீர் அருந்தவும்.
5. அதின வெப்பநிலை காரணமாக ஏதேனும் நோய் அறிகுறிகள் அல்லது ஒவ்வாமை ஏற்பட்டால் பாடசாலை ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்களிடம் தெரிவிக்கவும்.
6. உடல் சூட்டை குறைக்க தேவையானவற்றைக் கடைப்பிடிக்கவும்.
7. தேவையற்ற சந்தர்ப்பங்களில் டையை இறுக்கமாக கட்டிக் கொள்வதனை தவிர்க்கவும்.

## ஏயார் ரைபிளால் சுட்டு சிறுவனுக்குக் காயம்

இரு சிறுவர்கள் 'ஏயார் ரைபிள்' துப்பாக்கியினால் சுட்டு விளையாடிக்கொண்டிருந்தபோதுஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என தனோவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

வேவல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த சிறுவனே இவ்வாறு காயமடைந்தார், அவருக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் தங்கோவிட்ட பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆற்றில் வீழ்ந்தது பேருந்து மாணவர்கள் ஐவர் காயம்

மாணவர்களைஏற்றிச்சென்ற பாடசாலைப் பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து அம்பாறை ரணவிரு மாவத்தைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை பிரதேசத்தில் அமைந்து பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறுகாயமடைந்துள்ளனர்.

அம்பாறைபாடசாலைபஸ் ஒன்று வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதியை விட்டு விலகி வீழ்ந்து ஆற்றில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது இந்த பாடசாலை பஸ்ஸில் சுமார் 30 மாணவர்கள் பயணித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது.

## பொலிஸ் கான்ஸ்டபிள் அனுராதபுரத்தில் கைது

அநுராதபுரம் தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரிடம் ஐஸ் போதைப் பொருள் இருந்ததாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் 30 வயதுடைய மாவனெல்லை பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராவார். இவர் தற்போது மிஹிந்தலை ருவங்கம பிரதேசத்தில் வசித்து வருகிறார்

அநுராதபுரம் கண்டி வீதியைச் சேர்ந்த போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான 23 வயதுடைய ஒருவரை சந்தேகத்தில் கைது செய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே கான்ஸ்டபிளைக் கைதுசெய்ததனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2024இல் வெளியிடப்பெற்றது.